ந.க.எண்.8644/2025/எக்ஸ்1
நாள்.09.04.2025

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

## பத்திரிக்கை செய்தி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 732 **சமையல் உதவியாளர்** பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார அலுவலகங்களில் இனசுழற்சி வாரியாக தகவல் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது.

மாதிரி விண்ணப்ப படிவங்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அனைத்து வட்டாரங்கள் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகத்தில் தகவல் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட இணையதள முகவரி www.krishnagiri.nic.in–ல் செய்தி, விண்ணப்பம் மாதிரி, இனசுழற்சி வாரியாக காலியாக உள்ள பள்ளி சத்துணவு மையங்களின் விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சமையல் உதவியாளர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும். அவ்வாறு பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு கால பணிக்குப் பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (Level of pay –ரூ.3000–9000)) ஊதியம் வழங்கப்படும்.

இப்பணிக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

1) பழங்குடியினர் – 18 வயது முதல் 40 வயது வரை
2) விதவை, கணவரால் கைவிடப்பட்டவர் – 20 வயது முதல் 40 வயது வரை
3) பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் – 21 வயது முதல் 40 வயது வரை

குறைந்தபட்ச கல்வித்தகுதி 10 ஆம் வகுப்பு தோல்வி / தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் சரளமாக அனைவரும் கட்டாயம் எழுதப்படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும். நியமனம் கோரும் சத்துணவு மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்புக்கும் இடைப்பட்ட தூரம் 3.00 கி.மீ–க்குள் இருக்க வேண்டும். (ஊராட்சி–குக்கிராமம் – வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை)

**மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீட்டில் 4% இட ஒதுக்கீடு கீழ்க்கண்ட குறைபாடு உள்ளவர்கள் மட்டும் (உரிய அடையாள அட்டையுடன்) விண்ணப்பிக்க வேண்டும்.**

1) குறைவான பார்வை திறன் (மூக்குக் கண்ணாடி மூலம் பார்வை சரிசெய்யப்பட்டது)
2) காதுகேளாதோர் (கருவி பொறுத்தப்பட்டவர்)
3) குள்ளத்தன்மை கொண்டவர்.
4) உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்).
5) குணப்படுத்தப்பட்ட தொழு நோய் (40 சதவீதம் கைகளின் முழு செயல்பாட்டு திறன் உணர்திறன் மற்றும் செயல் திறன் உள்ளடங்கியது)
6) திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்.
7) குறிப்பிடப்பட்ட கற்ற திறன் குறைபாடு (மிதமான)

விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு 25% இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் விண்ணப்பங்களை ஆய்வு செய்திடும்போது 25% விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் 4% மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு வழங்கப்படும்.

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும்போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பிட வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 25.04.2025 மாலை 5.45 மணி வரை மட்டுமே. அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்பட மாட்டாது.**

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் நகல்.

1) பள்ளி மாற்றுச் சான்றிதழ்.
2) SSLC மதிப்பெண் சான்றிதழ்.
3) குடும்ப அட்டை.
4) இருப்பிட சான்று.
5) ஆதார் அட்டை.
6) சாதிச்சான்று.
7) விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்கள் சான்றிதழ்.
8) மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்.

சான்றிதழ்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். அஞ்சல் துறையின் மூலம் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படும் போது ஏற்படும் காலதாமதங்களுக்கு துறை பொறுப்பேற்காது. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின்போது அசல் சான்றிதழ்களுடன் கலந்துக்கொள்ள வேண்டும்.

வேறு அலுவலகங்களிலோ மற்ற அலுவலர்களிடமோ அளிக்கப்படும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. உரிய சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(காரணம் ஏதும் குறிப்பிடாமல் நியமன அறிவிப்பு அறிக்கையினை இரத்து செய்வதற்கும் திரும்ப பெறுவதற்கும் திருத்துவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட கெடு தேதியினை நீட்டிப்பதற்கும் மாவட்ட ஆட்சியருக்கு உரிமை உண்டு)

9/4/2025

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கிருஷ்ணகிரி.

9.4.25

மாதிரி விண்ணப்பப் படிவம்

சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பம்

சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தினை ஒட்டவும்

| மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம்/ மாநகராட்சி/ நகராட்சி | விண்ணப்பிக்கும் பள்ளி |
|---|---|---|
| | | |

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | |
| தந்தை/கணவர் பெயர் | |
| கைபேசி எண் | |
| விண்ணப்பதாரரின் இருப்பிட முகவரி (குடும்ப அட்டையில் உள்ளபடி) மற்றும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது | |
| ஊராட்சி ஒன்றியம்/நகராட்சியின் பெயர் | |
| கல்வித் தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) குறைந்த பட்சம் 10 தோல்வி/தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் கட்டாயம் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | |
| பிறந்த தேதி/ வயது | |
| சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| மாற்றுத்திறனாளி (ஆம் எனில் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) | ஆம்/இல்லை |
| ஆதரவற்ற விதவை /ஆதரவற்ற பெண்/ கணவரால் கைவிடப்பட்டவரா? ஆம் எனில் (வட்டாட்சியரின் சான்று இணைக்கப்பட வேண்டும்) | ஆம் / இல்லை |
| பணியிடம் கோரும் மையம்/பள்ளியின் பெயர் | |

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் பணியிடம் கோரும் மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் (மூன்று கிலோமீட்டருக்குள் இருத்தல் வேண்டும்) | |

நாள் :

இடம் : விண்ணப்பதாரர் கையொப்பம்

இணைப்பு

1. பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல்
2. SSLC மதிப்பெண் சான்றிதழ் நகல்
3. குடும்ப அட்டை நகல்
4. ஆதார் அட்டை நகல்
5. சாதிச் சான்றிதழ் நகல்